முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 293/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | வசந்தா |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | தனஞ்செயன் |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | ஆராத்திவேலூர் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்துக்கள் எனது மாமனாருக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். பாகபிரிவினை சொத்தாக பி ஷெட்யூல் சொத்தாக என் கணவருக்கு கிடைத்தது என்றால் சரிதான். என் கணவர் சொத்துக்கள் எந்தவித ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தான் மேற்படி சொத்திற்கு வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மேற்படி வாதி பிரதிவாதிகள் 5 பேருக்கும் சமபாகங்களாக கிடைக்ககூடியது என்றால் சரிதான். அதேபோல 2ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்துக்களை பொறுத்து 5 சமபாகங்களாக பிரித்துகொள்ள எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.